கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 234/2019

பிரதிவாதி தரப்பு சாட்சி – 1 சந்திரன் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 04.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>7 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனது தகப்பனார் பெயர் ராசமோகன் என்றால் சரிதான். நானும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து 26.07.2013ம் தேதி ரூ.97,500/-ற்கு 80 சென்ட் நிலத்தை நான்கெல்லை காண்பித்து அரியலூரில் இந்திய சிமெண்ட் நிறுவனத்திற்கு கிரையம் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி கிரையம் செய்த சொத்து ஆதியில் எனது தாயார் கருப்பாயிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தாயார் கருப்பாயி எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் உயில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி உயில் அடிப்படையில் நான் அனுபவம் செய்து வந்து மேற்படி 7 மற்றும் 8ம் பிரதிவாதி நிறுவனங்களுக்கு மேற்படி சொத்தை கிரையம் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி 80 சென்ட் கிரையம் பெற்ற நிலமானது 7 மற்றும் 8ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என்று கூறி நான் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான்.

**7 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

**வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai**